# இயேசுவே மேசியா என்பதை உறுதிபடுத்திடும் 16 தீர்க்கதரிசனங்கள் - பாகம் 1 - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சியில்.: இந்த பு{மிக்கு விசெசூpத்த நபரான மெசியாவை அனுப்ப பொவதாக தெவன் ஏற்கனவெ தமது தீர்க்கதரிசிகள் ஷலம் பல வருட';களுக்கு முன்பாகவெ டிசால்லியிருக்கிறாரா, குறிப்பாக என்ன தீர்க்கதரிசன';களை டிகாடுத்திருக்கிறார், எபிரெய வெதத்தில் எந்த பகுதிகளில் அந்த வார்த்தைகள் இருக்கிறது, அந்த தீர்க்கதரிசன';கள் உரைக்கப்பட்ட ய{த கூன';கள் வரப்பொகிற மெசியாவைக் குறித்து டிசால்லப்பட்ட குறிப்பான வார்த்தைகளை பஜரிந்துடிகாண்டார்களா, இந்த டிசய்திடிதாடரில் நாம் சுமார் 16 தீர்க்கதரிசன வார்த்தைகளை பார்த்திடலாம் ஆதாம் முதல் ஆபிரகாம் வரை.: மொசெ முதல் தாவீது வரை.: ஏசாயா முதல் தானியெல் சகரியா வரை. நாம் கெட்கலாம்.: இந்த மறுக்க முழயாத தீர்க்கதரிசன';கள் இயெசு தான் மெசியா என்பதை நிருபித்துள்ளதா,

எனது முதல் விருந்தினர் டாக்டர். வால்டர் டிபய்சர். அவர் இப்பொதுள்ள இறையியல் மெதைகளில் ஒருவர் மற்றும் இன்றைக்கு அடிமரிக்காவில் எபிரெய பத வசன';களின் வெத வல்லுநர். டுhக்டர் டிகய்சர் முதன்மை தலைவரும் பிரசித்தடிபற்ற

பா்ய ஏற்ப்பாட்டு விரிவஜரையாளராகவஜம் கார்டன் - கான்டிவல் இறையியல் டிசமினரி ஞாமில்டனில் இருக்கிறார்.். மா!;காவ்டிசட்!;. இரண்டாவதாக.். டாக்டர் டெரல் பாக். அவரும் நிகர்;கால இறையியல் வல்லுநர்களில் ஒருவர் பஜதிய ஏற்ப்பாட்டு வல்லுநராக இருக்கிறார். அவர் பஜதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் முதன்மை ஆராய்ச்சி விரிவஜரையாளராக இருக்கிறார் பாரம்பரிய கலாச்சார அமைப்பின் ஒரு';கிணைப்பாளராக டாலா!; இறையியல் டிசமினரியில் இருக்கிறார் டாலா!;.். டிடக்சா!;. இந்த விசெசூpத்த நிகர்;ச்சியில் இணைந்திடு';கள் கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்களை அதை கேட்டு வருகிறீர்கள். அவை யூத மக்களுக்கு அருளப்பட்டவை என்பதை புரிந்துகொள்ள முடிகிறதா. இவற்றை நீங்கள் வேதத்தில் பார்க்க முடியும். அவற்றை தேவன் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பதிவுசெய்திருக்கிறார். உண்மையை சொன்னால் இந்த தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் ஒரு நபரைத்தான் குறிப்பிடுகிறது. இதை சொல்லும் போNது மிகவும் வியப்பாக இருக்கிறது, “இதுதான் உண்மை. இதுதான் மெய்யாகவே நடந்த சம்பவம்.” இப்போது நாம் பலதரப்பட்ட தடயங்களையும், மேசியாவின் வருகையை குறித்து தேவன் கூறியிருக்கும் பல தரப்பட்ட தீர்க்கதரிசனங்களையும் பார்த்து வருகிறோம். அதன்பின்னர் அ;நத மேசியா யார் ஏன் அவர்

முக்கியதுவமானவர் என்பதை பார்க்கலாம். ஆனா, டேலர், முதல் சில வாரங்களை தவறிய மக்களுக்காக சுருக்கமாக அவற்றை விளக்கி சொல்லுங்கள். நாம் ஏதேன் தோட்டத்திலிருந்து ஆரம்பித்து மோசேயின் செயல்கள் வரைக்கும் பார்த்திருக்கிறோம். தேவன் பிரித்தெடுத்த அந்த வரிசையை சொல்லுங்கள்.

**டாக்டர். டேரல் பாக:** ஆதியாகமம் 3, “வித்து,” அவருக்கு தான் சாத்தான் மீது வெற்றி அளிக்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 9, அவர் சேமின் கோத்திரத்திலிருந்து சேமின் சந்ததியில் வந்திடுவார். ஆதியாகமம் 12, இந்த நிலையில் ஆபிரகாமின் மூலம் இந்த உலகத்திற்கு ஆசீர்வாதமாயிருப்பவர் வரப்போகிறார் என சொல்லப்பட்டுள்ளது, அவனுடைய வித்திலிருந்து அவர் வந்திடுவார். அங்கிருந்து நாம் ராஜாக்கள் மீது கவனம் செலுத்தினோம், அதற்கு பிறகு நாம் யாரைப் பற்றி பேசுகிNறும் என பார்த்தோம் ஈசாக்கா யாக்கோபா அல்லது ஆபிரகாமின் வம்சத்தில் வரும் வேறுயாராவதா, ராஜாக்கள் எழும்புவார்கள் என்ற வாக்குத்தத்தம் இருக்கிறது. ராஜா என்கிற கண்ணோட்டத்தில் பார்த்துக்கொண்டிருக்கும் போது தேசத்தை விடுவிக்கும் நபர் என்ற விஷயமும் இதில் கலந்துவிட்டது. அது மோசேயை குறிக்கிறது அவன் ராஜா அல்ல, ஆனால் ராஜாவிற்கு ஒப்பானவனாக அவன் இருந்தான். அவன் ஜனங்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கின தீர்க்கதரிசியும் தலைவனுமாயிருந்தான். அதன் பிறகு மோசேயைப் போல ஒருவர் எழும்புவார் என்கிற வாக்குத்தத்தத்தையும் நாம் பெற்றிருக்கிறோம்.

அதன் பிறகு இயேசுவையும் அவருடைய செயல்களையும் நாம் கவனித்து பார்த்தோம். அவர் பாவங்களை மன்னித்தார், மரித்தோரை எழும்பப்பண்ணினார் என்பதையும் பார்த்தோம். பழைய ஏற்பாட்டில் காணப்படாத அற்புதங்களை அவர் நிகழ்த்துவதை பார்த்தோம், உதாரணத்திற்கு குருடர் பார்வையடைந்தனர். அவர் தண்ணீரின் மேல் நடந்ததை பார்க்கலாம். அங்கும் இங்குமாக ஏதொவொரு சில அற்புதங்கள் என்று சொல்லமுடியாது, அவர் மத்தியில் தேவன் வாசமாயிருப்பதையும் இயேசுவின் மூலமாக தேவன் தமது கிரியைகளை நடப்பிக்கார் என்பதையும் தெளிவாக பார்க்க முடியும். எனவே இயேசு "மோசேக்கும் மேலானவர்."

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இதனை பட்டியல் போட்டு எழுதுகிறவர்களுக்கு சொல்லுகிறேன், நம்முடைய எட்டாவது தீர்க்கதரிசனமாக தேவன் கொடுத்திருக்கும் வார்த்தை இதுதான். நாத்தானின் மூலமாக அவர் தாவீதுக்கு சொல்கிறார் 2 சாமுவேல் 7: 11-16 - இதை கவனியுங்கள். இது மிகவும் அருமையான காரியம். "கர்த்தர் உனக்கு (தாவீதுக்கு) வீட்டை உண்டுபண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார். உன் நாட்கள் நிறைவேறி நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். ஆவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான்." இந்த

பகுதியை தான் நாம் பார்க்கவேண்டும். “அவன் அக்கிரமம் செய்தால் நான் அவனை மனுஷனுடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன். ஆனாலும் உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலினிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்க மாட்டேன்.” அதன்பிறகு, வசனம் 16, “உன் வீடும் உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார்.” சரி, தாவீது இதை கேட்டவுடன், அதை அசைபோடுகிறான், அதையே யோசிக்கிறான், அதன் பிறகு என்ன சொய்தான் என 2 சாமுவேல் 7 :18 சொல்கிறது, “அப்பொழுது தாவீது ராஜா உட்பிரவேசித்து கர்த்தருடைய சமுகத்திலிருந்து கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கமு; கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? இது இன்னும் உம்முடைய பார்வைக்குக் கொஞ்ச காரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து, வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர் முறையாகச் சொன்னீரே என்றான்.” டாக்டர் கெய்சர், இங்கு என்ன நடக்கிறதென சொல்லுங்கள்.

டாக்டர். வால்டர் கெய்சர்: சரி, இங்க தாவீது நாத்தானையும் அனைத்து சமுகத்தினரையும் அரண்மனை பிரதிஷ்டைக்காக அழைத்திருந்தான். அவன் கேதுரு மரங்களால் அரண்மனையை கட்டியிருந்தான். அதன் வாசைன அருமையாக இருந்தது, சுற்றிலும் கேதுருக்கள். அப்ப அங்க நாத்தான் வருகிறார், அவரிடம் இவர்,

“நாத்” - அவர் நல்ல அறிமுகமானவர்தான. அவருக்கு நான் ஒரு பெயர் வச்சுருக்கே - “நாத், நான் தேவனுக்கென்று ஒரு வீட்டை கட்ட நினைக்கிறேன்,” சொல்லி ஹை ஃபை கொடுத்துக்கிட்டாங்க. ஆமா. இன்று இரவு தேவன் நாத்தானிடம் சொல்கிறார், “இல்லை. நீ அடிவாங்குகிற விதத்தில் பேசினாய், நாத்தான். கர்த்தர் சொல்லுகிறார் என்று நீ சொல்லாமல் இருந்தாய். நான் ஒன்றும் சொல்லவில்லையே. நீ அவனிடத்தில் போய் சொல் அவனுக்கு நான் ஒரு வீட்டை உண்டுபண்ணுவேன்.” வீடு என்ற வார்த்தை சந்ததியை குறிக்கிறது, கோஸெஸ்சோல் ரின் வீட்டார் என்பதுபோல, எகிப்தின் பார்வோனின் வீடு என்பதற்கு ஒப்பானது. “நான் உனக்கு ஒரு வீட்டையும் ஒரு ராஜ்யத்தையும் ஒரு சிங்காசனத்தையும் ஏற்படுத்திடுவேன், அது என்றென்றைக்கும் -- இதை கவனிங்க, -- தாவீது - “அது என்றென்றைக்குமாய் ஸ்திரப்படும்”. இது பெரிய வியப்பை உண்டாக்குகிறது. முற்பிதாக்களில் ஒவ்வொருவரும் இந்த நித்திய நாளைக் காண வாஞ்சித்தார்கள். இங்கு தேவன், “அது என்றென்றைக்குமாய் நிலைத்திருக்கும் என்கிறார்.”

இதை கேட்டபோது தாவீது தேவனுடைய சமுகத்திற்குள் பிரவேசிக்கிறேன், அந்த நாட்களில் கூடாரங்களில் இருந்தது, அவன் அதில் பிரவேசித்து உட்கார்ந்து, “ஓ, என்ன இது! நான் என்ன செய்யப்போறேன்? மேலும் அவன், “நான் பெத்கலகேம் ஊரான், மிகவும் சிறியவன். அதாவது, நான் எருசலேம் நகரத்தானல்ல, அதுதான் உயர்ந்த குலம். நான் வெளிகளில் இருப்பவன், நான் ஒரு சாதாரன மேய்ப்பன். இது மட்டுட் போதாதென்று நிலையில், நீர்

என்னையும் என் பிதாவின் வீட்டையும் குறித்த பல காலங்களுக்கு முன்னதாகவே முன்னறிவித்ததோடு இதுதான் கற்பனை, இதுதான் கட்டளை, மனுக்குலத்தார் பின்பற்ற வேண்டியவை என்றிரே என்றான்." அவன் தனக்கு, விளங்கவில்லை என்கிறான். அவனுக்கு அது அதிகமாக தெரிந்தது தேவனே சொல்லிவிட்டார், "நீ தான் அவன். ராஜா வருவார் என்று சொல்லியிருந்தேன். அவர் உன் சந்ததியிலிருந்து வந்திடுவார். ஓ, எஸ். ஒருவேளை எனக்கு கீழ்ப்படியாமலிருக்கும் பிள்ளைகள் உனக்கு உண்டானால் என்ன செய்வது? ஆ, அப்படியிருந்தாலும் அவர்கள் இந்த பாதையில் நடப்பார்களே தவிற அதை சுதந்தரிக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் சரியான மனப்பான்மையோடு மட்டுமே அதை சுதந்தரிக்க முடியும். கடந்துபோகும் வாய்க்கால் ஒருவிதம், அந்த காரியத்தில் பங்காக இருப்பது மற்றொரு விதம். விசுவாசத்தினால் அப்படியாகும். விசுவாசத்தோடு அதில் பங்காற்றவேண்டும். இங்கு இரண்டும் அவனுக்கு சொல்லப்படுகிறது. என்னவொரு வாக்குத்தத்தம்! அதாவது, இது உண்மையில் மனதை உளுக்கும் வியப்பான விஷயம் 2 சாமுவேல் 7.

**ஆன்கர்பெர்க்:** டேரல்?

**பாக:** சரி, இது ஒரு நெஞ்சை உலுக்கும் செய்தியாகும். அதாவது, இங்கு தேவனே முன்வந்து இந்த காரியங்களை முன்மொழிகிறார், "ஒரு முக்கியமான செய்தியை நான் கொண்டு வந்திருக்கிறேன் அந்த முக்கிய செய்தி என்னன்னா உன்னுடைய சந்ததி

என்றென்றைக்குமாக நிலைத்திருக்கும் என்பதுதான்." இப்போது அவனுக்கு ஒரு புதிய உறவின் முறை உருவாகிறது அவர் தகப்பனாக, மகனாக, தனது ஆண்டவருக்கு தேவனாக இருக்கிறார். சாலோமோன் தேவனுடைய பார்வையில் தான் இருக்கிறான், ஏனென்றால் அவர் சொல்லும் போது தாவீது எனக்காக ஒரு ஆலயத்தை கட்டாமல் சாலோமோனே அந்த ஆலயத்தை கட்டுவான் என்கிறார். அங்கேயே ஆரம்பித்துவிட்டது. நாம் பார்த்துக்கொண்டிருக்கிற காரியத்திற்கு திரும்பி வருவோம். பலருக்குள் இருந்து வரும் அந்த ஒருவர். இந்த சந்ததியில் இருந்து பல ராஜாக்கள் தோன்றுகிறார்கள், எப்படியும் இந்த வாக்குத்தத்தங்களின்படி ஒருவர் தான் இரட்சிக்க வல்லவராவார். ஆனால் இதற்கிடையில் எல்லாவிதமான காரியங்களின் வெளிபாடுகளும் நடைபெறும். நமக்கிருக்கும் தடையம் இ;நத விசேஷித்த நபர், இந்த சந்ததியில்,வருவார் அவர் நித்தியமாக இருப்பார். இதனுடைய செயல்பாடுகளில் நமக்கு ஒரு செய்தி இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, தொடர்ந்து அதப் பார்த்திடலாம். 2 சாமுவேல் 23:5ல் தாவீது கூறுகிறார், "என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ, ஏனெனில் அவர்," தேவனைப்பற்றி சொல்கிறார், "சகலமும் திட்டம் பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் செய்திருக்கிறார். ஆதலால் என்னுடைய எல்லா இரட்சிப்பும் எல்லா வாஞ்சையையும் வளர்ந்தோங்க செய்யாரோ?" அதனுடைய அர்த்தம் என்ன, டாக்டர்

கெய்சர்? தாவீதை மட்டுமே சார்ந்ததாக இல்லாமல் தேவன் இதை எப்படியும் செய்திடுவார் என்பதை குறிக்கிறதா, இதை எப்படியும் தேவன் செய்வார் என்கிற அசையா நம்பிக்கை அவனுக்கு இருந்ததா?

**கெய்சர்:** ஆமா, நீங்க இதுவரை பார்த்திராத உத்தரவாதம் ஜீவனுக்கான காப்பீட்டு திட்டம் தான். அவர் சொல்கிறார், "உன்னுடைய குடும்பத்தின் வரிசையில் உன்னிலிருந்து என்னுடைய குமாரன் வந்திடுவார் என்பதை கூறுகிறார்." அது எவ்வளவு சுவாரஸ்யமானது, தேவன் சர்வலோகத்திற்கும் கர்த்தரானவர், சொல்கிறார், நான் நானே," உன்னுடைய வம்சத்தில் வந்து பிறக்கப்போகும் குமாரனாயிருக்கிறேன், அவருக்கு நான் தகப்பனாயிருப்பேன். அவர் என்னுடைய பிள்ளையாக இருப்பார். அவர் என் குமாரனாக இருப்பார்." தாவீது குழம்பி போயிருப்பார் என்று நான் நினைக்கிறேன். "இல்ல, இல்ல, அவர் என்னுடைய மகன்!" ஆனா தேவன் சொல்வார், "இல்ல, சாலோமோன் என் குமாரன் அவனுக்குபின் அவன் மகனுக்கு, அவன் மகனுக்கும், அவன் மகனுக்கும் மகன் என தேவனுடைய குமாரனாகிய நசரேயனாகிய இயேசு அவதரிக்கும் வரை தொடர்ந்தது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். நாம் திரும்ப வந்த பிறகு தாவீது எழுதிய ஒரு சங்கீதத்தை பற்றி பேச இருக்கிறோம். ஓகே, இந்த தகவல்கள் அனைத்தும் தாவீதிற்கு தேவனால் அருளப்பட்டது என்பது

ஞாபகமிருக்கட்டும். அவர் இந்த சங்கீதங்களை எழுதுகிறார், அவர் எழுதிய சங்கீதங்களை இதை வெளிப்படுத்தியிருப்பார் என நினைக்கிறீர்களா? நிச்சயம் என்பதை நம்புங்கள், அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளவும் அதை விளங்கிக்கொள்ளவும் நாம் சங்கீதம் 110:1ஐ தியானிக்க இருக்கிறோம். இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், தொடர்ந்திடலாம். நாம் இப்போது தேவன் தமது வார்த்தைகளில் கூறியிருக்கும் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களைப் பற்றி பார்த்து வருகிறோம், இப்போதும் நாம் டாக்டர். வால்டர் கெய்சர் மற்றும் டாக்டர் டேரல் பாக்குடன் பேசிக்கொண்டிருக்கிறோம். இப்போதும் தாவீது எழுதிய சங்கீதங்களில் ஒன்றை பார்க்கும்படியாக இருக்கிறோம். சிறிது நேரத்திற்கு முன்பு தாவீதிடம் தேவ்ன கூறியவற்றை நாம் கவனித்தோம் அவனுடைய சந்ததியிலிருந்து தோன்றும், ஒருவருடைய ராஜாசனம் என்றென்றைக்குமாக இருக்கும். ஆனால் இப்போது தாவீது சொல்வதை கேளுங்கள் சங்கீதம் 110:1. அதை உங்களுக்காக திரையில் காண்பிக்க விரும்புகிறோம் எங்களோடு சேர்ந்து கவனியுங்கள். “கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி, “நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார். கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார். நீர் உம்முடைய சத்துருக்கள் நடுவே ஆளுகை

செய்யும்." வசனம் 4: "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார். மனம் மாறாமலுமிருப்பார்." கேள்வி இதுதான், வால்டர், இந்த பகுதியில் தாவீதினுடைய "ஆண்டவர்" யாராக இருக்கிறார்? எங்களுக்காக சொல்லுங்க.

**கெய்சர்:** சரி, தாவீது இந்த இடத்தில் 13வது முறையாக வெளிப்படுத்துகிறார் -- சங்கீதங்களில் சுமார் 13 முறையாவது மேசியாவைக் குறித்து நேரடியான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது -- இந்த இடத்திலும் அவர் ஒருமுறை சொல்கிறார், "யு" - கர்த்தர், என் ஆண்டவரை நோக்கி - "டீ"இ அவர் தாவீதினிடத்தில் பேசுகிறார் - "ஊ". சோ, இந்த இரண்டாம் நபர் யார், "என்னுடைய ஆண்டவ்"? இது அரசாளும் ராஜாவைத் தவிற வேறுயாருமில்லை, அவர்தான் மேசியா, இந்த ராஜா, திருத்துவத்தின் உருவம், வரப்போகிறவர். அவர் சொல்கிறார், " நாம் உமது சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிபோடும் வரைக்கும் என் வலதுபாரிசத்தில் உட்காரும்", ராஜாக்கள் எப்படி ஜெயம் கொண்டவர்கள் அனைவரையும் வரிசைப்படுத்தி அழகு பார்ப்பார் என்பதற் இது ஒரு அருமையான உதாரணம். அவர் நகர வாசலுக்கும் முன்பாக தமது சிங்கானத்தை அமைத்து அவர்களை தமது பாதபடியாக்கி அவர்கள் மீது கால்களை பதித்து உட்காருகிறார். ஏதனால? ஏன்னா வரப்போகிறவர் தான் கர்த்தாதி கர்த்தராக இருக்கிறார், அவர் தேவாதி தேவன். எல்லாவற்றிலும் இறுதியான

வெற்றியாளர் அவரே. அதைதான் தாவீது சங்கீதம் 110 கொண்டாடுகிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மோசேயிடம் தேவ்ன சொன்னதைப் பார்த்தோம், “உன்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவேன்.” அதனால் யார் அவர் என்று பார்த்துக்கொண்டிருக்கிNறும் அவர் மோசேயை காட்டிலும் பெரியவராக இருக்கவேண்டும். இப்போது இதிலிருந்து அதை விளங்கிக்கொள்கிறோம், சரி, நீங்கள் பேசும்போது, சொன்னீர்கள், ஆபிரகாம் யாக்கோபு பிறகு மற்றவர்களிடம், தேவன் சொல்லியிருந்தார், “நான் ஒரு ராஜாவை எழும்பப்பண்ணுவேன்.” ஓகே, அவர் ஒரு விசேஷித்தமானவராக இருந்திடுவார், சூப்பர் டூப்பர் ராஜாவாக இருப்பார். இந்த வார்த்தை நமக்கிருக்கிறது. அவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராய் இருப்பார். ஜனங்கள் ஒருவேளை இதனுடைய அர்த்தம் தெரியாமல் இருக்கலாம். அதனுடைய அர்த்தம் என்ன?

**கெய்சர்:** சரி, மெல்கிசேதேக்கை பற்றி ஆதியாகமம் 14ல் பார்த்திடலாம். ஆபிரகாம் திரும்பி வந்தபோது தேவன் அவனுக்கு கொடுத்த அபார வெற்றிக்குப் பிறகு அதாவது தானிலிருந்து லோத்தை அவன் மீட்டுக்கொண்டு வந்தான், அப்போது ஈராக்கிலிருந்து வந்த 4 ராஜாக்களை அவன் சிறைபிடித்தான், அவர்கNளு ஐந்து படைகளாக எழும்பி லோத்தையும் அவன் ஜனங்களையும் சிறைபிடித்தவர்கள். இப்போது, அதாவது, இந்த

பகுதியில் தான் சாலேமின் ராஜாவாகிய ஆசாரியன் என்று சொல்லப்பட்டுள்ளது, அது எருசலேமிற்கு ஒப்பாக உள்ளது, அவனுக்கு ஆபிரகாம் தசமபாகத்தை கொடுத்தான். அதன் பிறகு அவன் ஒரு திருஷ்டாந்தமாக உதாரணமாக, வரப்போகிறவருக்கு, மாதிரியாக சொல்லப்படுகிறான். அதற்கு பிறகு அன்னாள் சாமுவேல் என்னும் குமாரனை பெறுகிறாள் ஏலியினிடத்தில் அவன் வளர்க்கப்படுகிறான். ஆனால் ஏலியின் 2 பிள்ளைகளும் தேவனைப் பின்பற்றாமல் முறைகேடாய் இருந்தனர். அப்போது தேவன் சொன்னார், "நான் அவர்களை அழித்துப்போடுவேன், ஆனாலும் நான் ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்." இதே வார்த்தைகள் தான் 2 சாமுவேல் 7லிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவை இரண்டையும் இணைத்து பார்க்கும் போது அவர் ஒரு ராஜாவாக மட்டுமல்ல, அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும், அவர் ஒரு ஆசாரியராகவும் இருக்ககூடும் என தெரிகிறது.

**ஆன்கர்பெர்க்:** டேரல், இந்த பகுதியை வைத்து விதாதிப்பதைவிட இயேசுவைக் குறித்த பார்க்கலாமே, என்ன நடந்தது என்பதையும் அவர் கேள்விகள் கேட்ட யூத தலைவர்களுக்கு இருந்த குழப்பங்கள் பற்றியும் அவர் சந்தித்த காரியங்கள், ஏன் அவருக்கு பதில் சொல்லவில்லை என்பதை சொல்லுங்கள். அதை நான் வாசிக்கிறேன் ஜனங்களும் புரிந்துகொள்ள உதவாயிருக்கும். "பரிசேயர்கள் எல்லாரும் கூட வந்திருக்கையில், இயேசு அவர்களை நோக்கி, 'கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர்

மேசியாவா? யாருடைய குமாரன் என்றார்." தாவீதின் குமாரன், என்றார்கள். அதற்கு அவர் பிரதியுத்திரமாக, அப்படியானால் தாவீது, ஆவியினாலே பேசும் போது, அவரை ஆண்டவர் என்கிறானோ? அவன் சொல்லும்போது, "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி, நான் உமது சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்." இப்படி, இருக்க, தாவீது ஆண்டவர் என்று சொல்ல, எப்பn அவருக்கு குமாரனாக இருப்பார்,' என்றார் ஒருவரும் அவருக்கு பதிலளிக்கவில்லை." இங்க என்ன வாக்குவாதம் நடக்கிறது?

**பாக:** சரி, முதலாவதாக, அவர்கள் யோசிக்கும்படியான கேள்வியை முன்வைத்தார். அதுதான் முக்கியமான விஷயம். இயேசு இந்த காரியத்தை பேசிடும் இரண்டு பகுதிகளில் இது ஒன்று. இதில் திறவுகோல் விஷயம் என்னவென்றால் முற்பிதாக்கள் கனம் பெற்றுக்கொண்ட திரையில் இவர்கள் இருக்கிறார்கள். இப்ப, முற்பிதாக்கள் என்று சொல்லி அனைவரையும் குறிக்காமல் தாவீதை மட்டும் நாம் பார்க்கலாம். நாம் ஏற்கனவே பேசின இந்த சந்ததியின் அஸ்திபாரமாக இருப்பவரை மட்டும் பேசிடலாம், இந்த குறிப்பிட்ட வம்சாவழி. சிறந்த முற்பிதாவை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம், அப்படிதானே. அவருக்கு தான் சகல கனமும் கொடுக்க வேண்டும். இருப்பினும், " கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி," தாவீது தனது சந்ததியை புரிந்துகொண்டான், அவர் தனது வம்சத்தில் வருவார் என்பதை விளங்கிக்கொண்டான். உண்மையில், அ;நத வரிசையை பார்க்கும்போது தேவன், தாவீது,

தாவீதின் சந்ததி, இயற்கையாகவே இப்படிதான் அமைந்திடும் தேவன், தாவீது, தாவீதினுடைய சந்ததி. ஆனா தாவீது தனக்கு கீழாக இருக்க வேண்டியவரை உயர்த்தி ஆண்டவரே என்கிறான். அது மட்டுமல்லாமல், இந்த நபர் உன்னதத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று கூறுகிறார். இங்க இரண்டு விஷங்கள் வியப்பை உண்டாக்குகிறது. முதலாவது வியப்பான விஷயம் தன்னுடைய வம்சத்தில் வருபவரை ஆண்டவர் என்றழைக்கும் முற்பிதா. அது நடக்கவே நடக்காத ஒன்று. நாம் பார்க்கும் இரண்டாவது விஷயம் அந்த வம்சத்தில் வருபவர் உன்னதத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பாராம், தேவனுடைய பிரசன்னத்தையே பங்குபோடும் மேலானவர். சரி, நீங்க நல்ல யூதனாக இருந்தா இந்த கேள்விய கேளுங்க. உன்னதத்தில் தேவனோடு உட்காரக் கூடியவர் யார்? உன்னதத்தில் தேவனோடு வீற்றிருக்க கூடியவர் யார்? யார் பரலோகத்தில் தேவனோடு வாசம்பண்ணமுடியும்? தேவன் தம்முடைய மகிமையையும் கனத்தையும் ஒருவருக்கும் கொடுக்க மாட்டார். அதனால் நமக்கு இந்த நபர் யார் என்ற தெளிவு உண்டாகிறது. இயேசு இவையனைத்தையும் அவர்களுக்கு முன்பாக வைத்து கூறினார், “நோ, Nநூ, நோ, நோ, நோ. தாவீதின் குமாரன் என்பதில் நீங்கள் கவனம் செலுத்தவேண்டாம். தாவீது அவரை என் ஆண்டவர் என்பதையும் அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்பதையுமே, நீங்கள் கவனிக்க வேண்டிம் என்றார்.”

**ஆன்கர்பெர்க்:** ஆமாம். உண்மையில், இந்த வசனத்தில், தேவன் அவரை அழைக்கிறார், அல்லது கட்டளையாக சொல்கிறார், “என் வலதுபாரிசத்தில் உட்காரும்.”

**பாக:** நிச்சயமாக, தேவன் அவரை அப்படி அழைப்பதால் எந்த குற்றச் சாட்டும் சொல்ல அங்கு வழியில்லை, ஏனென்றால் தேவன் தாம் விரும்புகிறபடி செய்திடுவார். அதனால் இவரை தமது வலதுபாரிசத்தில் உட்கார சொல்கிறார். இதுதான் முதல் சம்பவம், இது அவர்களை மௌனத்தில் ஆள்த்தியது. சரி, இதைப் பற்றி சிந்திக்க அவர்களுக்கு சில நாட்கள் கொடுக்கப்பட்டது, பிறகு இயேசு சில நாட்கள் கழித்து திரும்ப வருகிறார். இப்போது யூதர்களுடைய பரீட்சையில் இயேசு அவர்கள் முன்பாக நிற்க காய்பா இயேசுவைப் பார்த்து கேட்கிறான், நீர்தான் மேசியாவா, அதற்கு அவர் நான், அவர்தான்” அல்லது நீ சொன்னபடிதான் என்கிறார்.” சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற விதத்தை பொறுத்தது. நான் என்று அவர் சொல்வது உண்மை, அவர்கள் கேட்கும் விதத்திலேயே இருக்கவேண்டிய அவசியமில்லை. அதை தொடர்ந்து அவர் சொல்கிறார், “ இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதை காண்பீர்கள் என்றார்.” எனவே இந்த சங்கீதத்தை தானியேல் 7லுடன் இணைத்து கூறினார், அதைப்பற்றி நாம் இன்னும் பேச இருக்கிறோம், இங்கு அவர், “ஒருவேளை நான் போகிற இடத்தை நீங்கள் அறிந்து நீங்களும் வரவிரும்பினால் என்னுடைய ஈமெயில் தொடர்புகொள்ளுங்கள்: றறற.தேவனுடைய வலதுபாரிசம்.உழஅ . தேவன் என்னைப் பற்றி

கூறியிருப்பவைகளுக்கு இதுவே அடையாளம். இங்கு நீங்கள் என்னை சோதனைக்குட்படுத்தலாம். நான் வெட்கத்தோடு நிற்பதாக நினைக்கலாம். ஆனால் நான் குற்றமற்றவன்." இதில் சுவாரஸ்யமான விஷயம் யூத தலைவர்கள் அதை புரிந்துகொண்டனர். அதனால் இவர் தேவதூஷனம் சொல்கிறார் என்றனர். சரி, அவர் தன்னைக் குறித்து சொல்லியது பொய்யாயிருந்தால் தேவதூஷனம் சொல்லுவார். அவர் தன்னைக்குறித்து சொல்லியதை அவர்கள் நம்பவில்லை, அதனால் தேவ தூஷனம் சொல்கிறார் என்று குற்றம்சாட்டினார்கள். ஆனால் இயேசு சொல்கிறார், "இல்லை, தேவ்ன என்னை உயர்த்திடுவார்." இப்ப நம்ம சாய்ஸ் என்ன: அது தேவதூஷனமா இல்ல உயர்த்தபடுகிறாரா? இயேசுவின் உயிர்தெழுதல் தான் தேவன் அவருக்கு அளிக்கும் பலனாக இருந்தது. இயேசு மரணத்திலிருந்த உயிர்த்தபோது தேவன் அவரை ஆதரிப்பது நிருபனமானது. அவரை அவர் தமது வலதுபாரிசத்தில் வீற்றிருக்கசெய்து கெம்பீரமாக சொல்கிறார், "இயேசு தன்னைப்பற்றி சொல்லிய அனைத்தும், உண்மை."

**ஆன்கர்பெர்க்:** டாக்டர் கெய்சர், இதை சுருக்கமாக சொல்லுங்க. இந்த நிகழ்ச்சியில் எதைப்பற்றி பகிர்ந்துகொண்டோம்? இப்போது எங்கிருக்கிறோம்? இன்றைக்கு ஜனங்கள் கேட்ட விஷயங்களில் எதை அவர்கள் ஆணித்ரமாக மனதில் பதித்திட வேண்டும் என்கிறீர்கள்?

**கெய்சர்:** அவர்கள்  புரிந்துகொள்ளவேண்டிய ஒரு விஷயம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரும் வரப்போகிறவருமானவரைப் பற்றி, இ;நத வேத வசனங்களில் - 66 புத்தகங்ளாக 1,400 வருடங்களுக்கு முன்பே எழுதப்பட்டிருக்கிறது. 3 வெள;வேறு கண்டங்கள், ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசியா. 3 வெள;வேறு பாஷைகளில் சொல்லப்பட்டிருக்கிறது, எபிரேய மொழி, அராமிக் மற்றும் கிரேக்கம் - ஒரே கருப்பொருள், ஒரே சம்பவம், ஒரே திட்டம் தான் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதில் சொல்லப்பட்டவை அவர் ராஜாவாக இருப்பார். அவர் தாவீதின் வம்சத்திலிருந்து தோன்றுவார் அவருக்கு ராஜாசனமும் சந்ததியும் ராஜ்யமும் இருக்கும். இந்த கற்பனைகள் அனைத்தும் மனுக்குலம் முழுவதற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது இதைக் கேட்டு விசுவாசிக்கிறவன் நித்திய ஜீவனை அடைவான். இதை கேட்கிறவர்களுக்கும் நித்திய ஜீவன் இருக்கும், அதோடு, அவர்கள் தங்கள் நம்பிக்கையில் வரப்போகிற தேவனுடைய குமாரனே முன்பு வந்தவரும், மீண்டும் வருகிறவருமாயிருக்கிறார் என்பதில் உறுதியாயிருக்கவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** நீங்கள், இதை பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள், நிச்சயம், இதைக் குறித்து சிந்திப்பீர்;களௌன நம்புகிறேன். இவை உங்கள் வேதத்தில் உள்ளவை, இவை கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது. அடுத்த வாரம் நாம் பார்க்க இருப்பது ஏசாயா 53, 52 மற்றுமு; 53, அதோடு இன்னும் சில விஷயங்கள். அடுத்த ஓரிரு வாரங்கள் ஏசாயா 52 மற்றும் 53ல் கவனம் செலுத்திடலாம். வேதம் என்ன சொல்கிறது என்பதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். அது

நம்மை வியக்கச் செய்கிறது. கிறிஸ்தவர்கள் இதைக் கேட்கவேண்டும். இறைநம்பிக்கையற்றவர்கள் கேட்கவேண்டும், யூத மக்களும்கூட கேட்கவேண்டும், இந்த நபரைக் குறித்து உங்கள் தீர்க்கதரிசிகள் என்ன சொல்லியிருக்கிறார்கள், இதை அறிந்துகொள்ள நிகழ்ச்சியை பாருங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2014 A.T.R.I.